**இலங்கை நியமங்கள் நிறுவனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புகள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது

கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதிகள் அதன் காலத் தேய்மானப் | நீண்ட காலமாக கடன்பட்டோர்களிடம் சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்ய | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இற்கு நேரொத்ததாக நிதிக்கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 32,909,431 தொகைக்கான 364 கடன்பட்டோர் மீதிகளுக்காக குறைபாட்டு சோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. கடன் பட்டோரிடம் மீள அறவிடும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதற்கான சான்றுகள் உரிய முறையில் கிடைக்கப் பெறாமையால் 2020 ஆண்டின் போது குறைபாட்டு சோதனை பரிசோதனை மேற் கொள்ளப்படவில்லை. கடன்பட்டோர்களை அறவீடு செய்யும் செய்முறை வெற்றியளிக்கவில்லை எனின், 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் படி நடவடிக்கை எடுக்கப்படும். நடாத்தப்பட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போது கடன் பட்டோரிமிருந்து மீள அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. | தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள படிவம்சார் சட்டகத்தின் OB 17 இன் பிரகாரம் ஏதேனும் கணக்கீட்டு நிறுவனத்தில் ஏற்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் மூலம் பொருளாதார வளங்களுக்காக ஏற்படும் தாக்கங்கள் நிதி சார் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு நடைபெறும் காலப்பகுதியில் அன்றி குறிப்பிட்ட தாக்கம் ஏற்பட்ட காலப்பகுதியை இனங்காண வேண்டியிருந்த போதிலும், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் கருமங்கள் தொடர்பாக 2018 மற்றும் 2019 ஆண்டுகள் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 12,294,325 தொகை ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், | ஏதேனும் நிதியாண்டினுள் சேவை நாடுனரினால் செலுத்த வேண்டிய வருடாந்த கட்டணத் தொகையை இனங் காண்பதற்காக உரிய இணைந்த முகாமைத்துவ முறைமை ஒன்று காணப்படவில்லை. அதனால், இந்த வருடாந்த கட்டணத் தொகை 2020 ஆம் ஆண்டில் கிடைத்திருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிறுவனத்தில் தற்போது காணப்படும் வழமையானது வருமானம் கிடைக்கும் போது | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப வருமானம் மற்றும் செலவினங்களை துல்லியமாக அடையாளம் காணக்கூடிய தகவல் கட்டமைப்பு துல்லியமான தகவல்களுடன் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்திற்கு உரிய காலப்பகுதியை திட்டவட்டமாக இனங்காணத் தவறிய காரணத்தால் மீளாய்வாண்டின் போது கிடைத்த வருமான மூலங்களிலிருந்து அந்தந்த ஆண்டுகளுக்குரிய அளவு எவ்வளவு என்பதை இனங்காண முடியாத பற்றுச்சீட்டுகளுக்குரிய பெறுவனவுகளும் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டு | நம்பகமான அளவீடுகள் இல்லாததால், பெறப்பட்ட ஆண்டில் வருமானமாக அடையாளம் காணுதல் ஆகும்.<br><br>அது மாத்திரமன்றி, இந்த வருமானங்கள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான வருமானங்களாக இனங்காணப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவும். | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆம் பிரிவின் படி வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட முடியாத போதிலும், நிறுவனத்தின் பரிசோதிப்புக்காக உரிய இடத்திற்கு செல்லுதல் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட போக்குவரத்து கட்டணம் உரிய ஒப்பந்ததாரரிடம் அறவிடப்பட்டிருந்ததுடன், அவ்வாறு கிடைத்த கூட்டுத்தொகை ரூபா 10,254,941 ஆன போக்குவரத்து வருமானம், போக்குவரத்து கட்டண செலவினத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம், இருப்பு அதன் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதிக்கு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 1,499,794 பெறுமதியான இருப்பு தேறிய தேறக்கூடிய பெறுமதியை மதிப்பீடு செய்யாது நிதிக்கூற்றுக்களில் கிரயத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், இருப்பின் கீழ் கொள்ளப்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகளுக்காக 2020 ஆம் ஆண்டுக்கான இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அண்மைக்கால் முகாமைத்துவக் கூட்டங்களில் இது கலந்துரையாடப்பட்டு, வருடாந்த பொருள் மெய்மையாய்வின் ஊடாக இந்த உபகரணங்கள் மற்றும் கருவிகளை மெய்மையாய்வுக்கு உட்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதிக்கு கணக்கு வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் காரணமாக இருப்பு மெய்மையாய்வின் போது இது பின்பற்றப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இருப்பு, கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதிக்கு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் மதிப்பிழந்த காசோலைகள் கணக்கில் மீளாய்வாண்டின் மீதி ரூபா 198,982 ஆக காணப்படுவதுடன், அந்த மீதி ஆண்டின் இறுதியில் வியாபாரக் கடன் பட்டோர் மீதிக்கு சீராக்கம் செய்யப்படாத காரணத்தால், மொத்த கடன் பட்டோர் மீதி ரூபா 198,982 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த குறைபாட்டினை 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளில் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 401,750 கூட்டுப் பெறுமதியான 10 உருப்படிகள் அட்டுறுச் செலவினமாக கணக்கு வைக்கப்படாத காரணத்தால், நிறுவனத்தின் ஒட்டுமொத்த மிகை அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 401,750 பெறுமதியான இந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக பற்றுச்சீட்டுக்கள் 2021 பெப்ரவரி மாதத்திலேயே கிடைத்துள்ளன. பாரிய அளவிலான ஊழியர் பற்றாக்குறையால் குறித்த கொடுப்பனவுகள் தொடர்பான பின்தொடர் பணிகளுக்காக தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், இந்த தாமதங்கள் மற்றும் தவறுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுக்குரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக கிடைத்த ரூபா 154,961 தொகை 2021 ஆம் ஆண்டின் வருமானமாகவும், எதிர்வரும் வருடத்திற்காக கிடைத்த ரூபா 37,534 தொகை மீளாய்வாண்டுக்கான வருமானமாகவும் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காண்டுக்குரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன் பட்டோரிடமிருந்து கிடைத்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 198,982 கூட்டுத்தொகையான வைப்புக்கள் மதிப்பிழந்திருந்ததுடன், | மதிப்பிழந்த காசோலைகளுக்கு உரிய நிலுவைப் பணத்தில் ரூபா 146,241 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய மதிப்பிழந்த காசோலைகளை சட்டரீதியான நடவடிக்கை | கடன் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றுள் ரூபா 50,741 கூட்டுத்தொகையான 05 வருடங்களை விஞ்சிய போதிலும், அந்த மீதியை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | |
| (ஆ) | ஏனைய கடன் பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 1,343,053 ஆன 05 கடன் பட்டோர் மீதியில், 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 916,466 தொகையான கடன் பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் பட்டோரை சட்ட நடவடிக்கைகளின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015-2018 காலப்பகுதிக்குரிய 05 ஒப்பந்தங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட தொகையான ரூபா 777,008 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விடுவிக்கப்படாது காணப்பட்டது. | குறித்த வழங்குநர்களின் கோரிக்கையின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்படும். வழங்குநர்களால் அவர்களின் நிறுத்தி வைத்தல்களின் மீது இதுவரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளின் பேரிலும் கைது செய்யப்பட்டவர்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். | நிலுவை தொகையை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 முதல் செலுத்த வேண்டியதாக காணப்படும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக் கணக்கு ரூபா 49,747,361 ஆன மீதியை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் நிறுவனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திடமிருந்து கிடைத்த அவதானிப்புகளுடன் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 49,747,361 தொகையை தீர்ப்பனவு செய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | நிலுவை தொகையை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 07 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,641,214 கூட்டுத் தொகையான முற்பணங்கள் 2021 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணங்களிலிருந்து ரூபா 151,800 உரிய பணிப்பாளர்களால் தீர்த்து வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. பணிப்பாளர் (நியமம்) வேண்டுகோளின் பேரில் ஒரு விழாவிற்காக காலி முகத்திடல் ஹோட்டலுக்கு ரூபா 100,000 செலுத்தப்பட்டுள்ளது. பணத்தைத் திரும்பப் பெறுவதற்குப் பதிலாக வேறு நிகழ்வுக்கு மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக காலி முகத்திடல் ஹோட்டலினால் பணிப்பாளரிடம் (நியமம்) தெரிவிக்கப்பட்டுள்ளது. | முன்பணம் செலுத்துவது தொடர்பான பணிகள் முடிந்தவுடன், முன்பணத்தை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதிக்கான வைப்புச் செய்யப்பட்ட போதிலும், தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கிய போதிலும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை சீராக்கம் செய்த பின்னர் மீண்டும் நிலுவையாக உள்ள அளவினை சீராக்குவதன் மூலம், மாத இறுதியில் உள்ள காசுப் புத்தகத்தின்படி மீதி பெறப்பட்டிருந்ததுடன், அந்த நிலுவைத் தொகை பற்றிய விரிவான குறிப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2020 திசெம்பர் மாதத்திக் நிலுவையில் உள்ள சீராக்கல்களின் மதிப்பு ரூபா 11,537,762 ஆன பாரிய தொகையாவதுடன், இந்த நிலுவையிலுள்ள சீராக்கல்கள் 2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் அவதானிக்கப்பட்டது. | 2020 திசெம்பரில் மாதத்திற்காக வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத செலவாக ரூபா 11,537,762 தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் சேவைகளைப் பெறுவதற்காக வாடிக்கையாளர்களால் நேரடியாக இலங்கை நியமங்கள் நிறுவன வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட பணம் மற்றும் காசோலைகள் ஆகும். | வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரிக்கும் போது அனைத்து பரிவர்த்தனைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 55,669,799 ஆன மிகை ஒன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 113,952,527 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 58,282,728 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்பாட்டுச் செலவினம் ரூபா 85,332,211 இனால் குறைவடைந்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 128,353,122 இனால் மற்றும் நிதி வருமானம் ரூபா 15,261,816 அனால் குறைவடைந்திருந்தமை ஆகியன முக்கியமான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை நிறுவுவதற்குரிய ஆலோசகரைத் தேர்ந்தெடுத்து 2017 ஏப்ரல் 27ஆம் திகதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தப்படி இந்த பணியை நான்கு கட்டங்களை கொண்டதாக 06 மாதங்களில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது. முதல் கட்டத்தின் பணியான தற்போதுள்ள அமைப்பை மதிப்பீடு செய்தல், பொருத்தமான புதிய முறையை முன்மொழிதல், அதற்குத் தேவையான விவரக்குறிப்புகளைத் தயாரித்தல், முன்மொழிவுகளைத் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்வதற்கு 2017 ஜூலை மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்கு ரூபா 1,816,103 மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின்படி, இரண்டாவது கட்டத்தின் செயல்பாடான மென்பொருள் மற்றும் வன்பொருளை வாங்குவதற்கு பொருத்தமான நிறுவனம் அல்லது நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு | இந்த செயற்திட்டத்திற்காக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள செயல்நடவடிக்கைதிட்டம் (Action Plan) முதலில் தயாரிக்கப்பட்டது என்பதுடன், பல முறை திருத்தப்பட்டது. மேலும், பொது சபையால் செயற்திட்ட ஓராண்டு இடைநிறுத்தத்திற்குப் பிறகு திட்டத்தை மீண்டும் தொடங்க அனுமதி அளித்து புதிய செயலநடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு வருவதால், கொள்முதல் பணிகளை மேற்கொள்ள தகுதியான அதிகாரியை நியமிக்க முடியவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் தேவையை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டாவது கட்டத்தின் தொடக்கத்தில் 50 சதவீதமான தொகையை செலுத்த வேண்டியதுடன், அதன்படி அந்தத் தொகையாக வட் உள்ளடங்களாக ரூபா 538,363 தொகைக்காக 2018 மார்ச் 31 அன்று பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, இரண்டாம் கட்டப் பணிகள் இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும், ஆனால் 2021 அக்டோபர் 31 வரையிலும் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஏதேனும் திட்டவட்டமான சந்தர்ப்பத்தில் நிறுவனத்திற்கு சொந்தமான இருப்பினை அதனுடன் தொடர்புடைய விரிவான தகவல்கள் (உருப்படி, அலகொன்றின் விலை, அளவு) ஆகியவற்றுடன் இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய இருப்பு அறிக்கையிடல் கட்டமைப்பொன்று நிறுவனத்திடம் காணப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குறித்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இருப்புக்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று போதுமானதாக காணப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தினால் இருப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | குறித்த கணக்காய்வு ஐயவினாவுக்காக பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இருப்புக்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று போதுமானதாக காணப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆகஸ்ட் மாதம் முதல் 2020 ஒக்தோபர் மாதம் வரையிலும் 270 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட போசியேல் பீங்கான் பொருட்களிடையே தரத்தினை பரிசோதனை செய்த 152 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட தேறிய நிறை 1,566,258.40 கிலோ கிராம் மற்றும் | போசிலேன் மற்றும் செரமிக் பொருட்களுக்கான பரிசோதனையானது 2020.02.29 ஆந் திகதிய 1/21/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமே மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் ஈயம் மற்றும் கெட்மியம் பரிசோதனை மாத்திரம் | மக்களுக்கு தரமான பொருட்களை துகர்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் நியமங்கள் நிறுவனத்தின் பணிப்பொறுப்பாவதுடன், உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் 849,623.74 தொகையான மாதிரியொன்று தெரிவு செய்யப்பட்டதுடன், அந்த மாதிரியில் 75 சதவீதத்திற்காக பாரவுலோகம் (Heavy Metal) பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இலங்கை நியம இலக்கம் 1222 : 1 பகுதி : 2001 (Sri Lanka Standard 1222 : Part 1 : 2001) இன் போசிலேன் பீங்கான் பொருட்கள் நியமத்திற்கு அமைவானதா என்பதை பரிசோதித்து பார்ப்பதற்காக 16 பரிசோதனைகள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவற்றிடையே ஒரு பரிசோதனை அதாவது லெட்/கெட்மியம் உள்ளடக்கப் பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தர நியமங்களின் ஊடாக தரத்தினை பரிசோதிப்பதற்காக 16 பரிசோதனைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள போது, ஒரு பரிசோதனையின் அடிப்படையில் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட போதிலேன் பொருட்களின் தரத்தினை பரிசோதித்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாக காணப்பட்டது. | அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த வரித்தமானி அறிவித்தலின் பிரகாரம் போசிலேன் மற்றும் செரமிக் பொருட்கள் உரிய பரிசோதனையின்றி இறக்குமதியாரிடமிருந்து களஞ்சியத்திற்கு விடுவிக்கப்படாது. செரமிக் பொருட்களுக்கு தர நியமம் தயாரிக்கப்படவில்லை. எவ்வாறான போதிலும் செரமிக் பொருட்களுக்கு போசிலேன் பொருட்களுக்கான தர நியமங்களை பரிசோதிக்க முடியாது. | தேவையான பின்புலத்தை உருவாக்குதல் மற்றும் உரிய தர நியமங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | SLSI/19/27984 ஆம் இலக்கத்தின் கீழான இறக்குமதிகளை பரிசோதனை செய்த பெறுமதி ஐ.அ.டொலர் 1255.3 கொண்ட 26025 போசிலேன் உபகரணங்களின் தொகுதிகளை அடையாளமிடல் (Markings), SLS 1222 : 1 பகுதி : 2001 நியமத்திற்கு இணங்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அந்த பொருட் தொகுதியினை விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் | ஆய்வுகள் தோல்வியுற்றால், அதை சரிசெய்ய இறக்குமதியாளருக்கு அறிவிக்கப்படும். நினைவூட்டலுக்கு இறக்குமதியாளர் பதிலளிக்கவில்லை எனில், எச்சரிக்கையுடன் இயக்குநரால் அந்த இருப்பு அங்கீகரிக்கப்படும் | சந்தைக்கு தரமற்ற பொருட்களை வெளியிடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | | |
| (இ) | உற்பத்தி சான்றிதழ் இலட்சிணையை பெற்றுக்கொண்ட பொருட்களின் தரம் தொடர்பிலான பரிசோதனைக்காக சந்தைப் பரிசோதனையொன்றினை மேற்கொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டளவில் SLS இலட்சிணையை பெற்றுக்கொண்ட பொருட்களின் எண்ணிக்கை அண்ணளவாக 1105 ஆன போதிலும், அதற்கு ஒப்பாக சந்தை பரிசோதனைகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், இதன் காரணமாக தரத்தில் குறைவான பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் உயர் அபாயமொன்று நிலவுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு வருடமும் சந்தை தயாரிப்பு ஆய்வுகளை நடத்தும் போது SLS சான்றிதழை வழங்கும் போது அந்த பதிவுகள் கவனத்தில் கொள்ளப்படும். இருப்பினும், துறைக்கு கிடைக்கும் சவால்கள் மற்றும் வளங்களைப் பொறுத்து, நுகர்வோர் புகார்கள் மற்றும் மோசமான சோதனை அறிக்கைகள் கொண்ட தயாரிப்புகளுக்கான சந்தை ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. | போதுமான சந்தை ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலம் சந்தையில் விற்கப்படும் தரமற்ற மற்றும் தரத்துடன் இணக்கமற்ற தயாரிப்புகளின் அபாயத்தைக் குறைக்க உதவ வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு ஆய்வுகூடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டு பரிசோதனை அறிக்கைகளை வெளியீடு செய்தல் தொடர்பில் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாதிரிக்காக 2019 ஆம் ஆண்டின் உணவு தொடர்பான ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகள் 100, மின்சார உபகரண அறிக்கைகள் 184, இரசாயன பொருட்கள் தொடர்பான அறிக்கைகள் 256, நுண்ணுயிர்கள் தொடர்பான பரிசோதனைகள் 218 மற்றும் உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படும் மூலப்பொருட்களின் தரம் தொடர்பில் 81 பரிசோதனை அறிக்கைகளும் என 839 அறிக்கைகள் | ஆய்வுகூடங்களில் உள்ளக செயல்முறைகள் உட்பட பிற தொடர்புடைய செயல்முறைகளுக்கான நேர இடைவெளியைக் குறைக்க ஆய்வுகூடம் எப்போதும் செயற்படுகின்றது. அவ்வாறான போதிலும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை பரிசோதிக்கும் போது துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ள சரக்குகள் மற்றும் தொடர்புடைய மாதிரிகளின் ஆய்வுக்கு முன்னுரிமை அளித்தலும், சில உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களின் பயன்பாட்டுச் செலவைக் குறைப்பதற்கும், அதிக எண்ணிக்கையிலான அளவுருக்கள் இருந்தால், ஆய்வாளரால் சோதனையில் செலவழித்த நேரத்தைக் குறைப்பதற்கு சில அடையாளம் காணப்பட்ட | பரிசோதனை அறிக்கைகளை விரைவாக வழங்க உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும். |

உள்ளடக்கப்பட்டது. PR-11-03 இன் 3.14(1) இன் பிரகாரம், மாதிரிகள் அந்த திகதியில் அல்லது அதற்கு அடுத்த திகதியில் கோரிக்கை கடிதத்துடன் (Request Letter) குறித்த இரசாயன ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அதனை விட அதிக தாமதம் ஏற்பட்ட 481 சந்தர்ப்பங்களும், மாதிரிகள் கிடைத்திருந்த போதிலும் பரிசோதனை ஆரம்பிக்கப்படாத 359 சந்தர்ப்பங்களும், மாதிரிகள் கிடைத்திருந்த போதிலும் பரிசோதனை ஆரம்பிக்க பணிகள் ஒப்படைக்க தாமதமாகிய 130 சந்தர்ப்பங்களும், கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பரிசோதனை அறிக்கைகளிடையே பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகளை தயாரிப்பதற்கு தாமதமாகிய 169 சந்தர்ப்பங்களும், பரிசோதனை அறிக்கைகளை தயாரித்து ஆய்வுகூடத்திற்கு பொறுப்பான தலைவரால் சான்றுபடுத்தல் தாமதமாகிய 72 சந்தர்ப்பங்களும், பணி ஒப்படைக்கப்பட்ட திகதி மற்றும் பொருட்களை வெவ்வேறாக பரிசோதிக்காது ஒரு குறிப்பிட்ட மாதிரி அளவை பகுப்பாய்வுக்கு இணைத்தல் போன்ற விடயங்களால் தாமதம் ஏற்படுகிறது.

நுண்ணுயிர் ஆய்வகப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த அப்போதைய நு.பி. பணிப்பாளர் ஓய்வு பெற்றதுடன், அதன் பின்னர் பதிற்கடமை உத்தியோகத்தரும் அதற்கு அண்மைய திகதியொன்றில் பிரசவ விடுமுறை எடுத்துள்ளமையும், சோதனை அறிக்கையில் ஏதேனும் பிழைகள் இருந்தால், அவற்றை சரிசெய்ய வேண்டி நேர்வதுடன், சில சந்தர்ப்பங்களில் மீண்டும் சோதனை (Re-Testing) செய்ய வேண்டியிருப்பதும், கடந்த 2-3 வருடங்களாக ஆய்வுப் பணியாளர்களில் அதிகளவான வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இதுவரை பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கவில்லை என்பதும், ஆய்வுகூடத்திற்கு ஒரு வருடமொன்றில் பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தாலும், அதற்கு இணையாக பணியாளர்கள் அதிகரிக்காமை போன்ற காரணங்களால் காலதாமதம் தவிர்க்க முடியாததாக இருந்தது.

இருப்பு பரிசோதனைக்கான தேவை அதிகரித்து வருகிறது, குறைந்த மற்றும் குறைந்த வசதிகள் இருந்தபோதிலும், வழங்குவது கடினம் மற்றும் பணியாளர்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் அதிகளவில் தேவைப்படுவதுடன், அவ்வாறு செய்வதற்கு தற்போதுள்ள ஆய்வுகூடத்தில் போதுமான நிலத்தை பெற்றுக்கொள்ள

| | | |
|---|---|---|
| | முடியாதுள்ளது. இதன் காரணமாக நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஆய்வகத்திற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |

**3.3 செயற்திட்ட அல்லது மூலதன பணியிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆய்வுகூட கட்டிடத்தை கட்டுவதற்காக இலங்கை நியமங்கள் நிறுவனம் ஹல்பரவத்த மாலபே பகுதியில் 03 ஏக்கர் காணியை கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 168 மில்லியன் முன்பணமாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு நிலத்திற்கான முழுப் பணம் செலுத்தி முடிக்கப்பட்டாலும், 2021ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் திகதி வரையிலும் சொத்தின் உரிமையைப் பெற முடியாதிருந்தது. | 2016.08.24 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பௌதீக உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வு ஐயவினாவின் படி உரிமையைப் பெறுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்தை உரிமையாக்கி உரிய கட்டிடத்தை விரைவில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 393 ஆக உள்ளதுடன், 2021 யூன் 30 ஆந் திகதியளவில் அவற்றுள் 27 சதவீதமான பதவிகளான 106 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. இந்த வெற்றிடங்களிடையே 50 சதவீதம் பதவிநிலை தரத்திற்கு உரியவை ஆகும். | நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு வருகிறது, செயல்முறை நிறைவடைந்ததும் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளலாம். | ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு சேவைகள் திறமையாக நடாத்திச்செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஊடாக வணிக நிர்வாகத்தில் இளங்கலை அல்லது விவசாயம் அல்லது விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் ஆகியவற்றுக்க மேலதிகமாக 20 வருட நிறைவேற்று தர அனுபவம் மற்றும் 12 வருட உயர் முகாமைத்துவ அனுபவம் அவசியமானதென குறிப்பிடப்பட்டது. எவ்வாறான போதிலும், தேவையான தகுதிகளை பூர்த்தி செய்தமைக்கான போதுமான ஆதாரங்களை முன்வைக்காத பெண் உத்தியோகத்தர் ஒருவர் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். | தன்னார்வ சேவைகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட மாட்டாது. மூத்த நிர்வாக அனுபவம், உயர் நிர்வாக அனுபவம் அல்லது கல்வி மற்றும் ஆராய்ச்சி (AR) அனுபவம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள முடியுமா என்பதற்கும் தெளிவான வரையறை இல்லை. 05 வருட இளங்கலை பட்டம் மற்றும் 03 வருட தன்னார்வ அனுபவம் உள்ளடங்களாக 21 வருட அனுபவம் உள்ளது. நேரமுகப் பரீட்சைகள் குழுவின் முடிவுகளே இறுதியானது என்பதால், அந்த முடிவுகள் குறித்து நிறுவனத்திற்கு கருத்து தெரிவிக்க முடியாது. | அனைத்து ஆட்சேர்ப்புகளும் தொடர்புடைய நடைமுறைக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், தகுதி மற்றும் அனுபவம் குறித்து ஏதேனும் தெளிவின்மை இருந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்து தெளிவுபடுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |